**தேசிய விளையாட்டு நிதியம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய

வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் கொரியாவில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கை மேசைப்பந்து சங்கத்திற்கு ரூபா 2,000,000 வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் கொரோனாத் தொற்றுக் காரணமாக அப்போட்டி காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. இத்தொகை விளையாட்டு நிதியத்திற்கு மீண்டும் செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, இச்செலலவு நிதிக்கூற்றுக்களில் | இந்த ரூபா 2 மில்லியன் செலவிற்கான காசோலை இரத்துச் செய்யப்பட்டு குறித்த செலவு விடயத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது தவறுதலாக அனுசரணை பெறுவனவுகளாக குறிப்பிடப்பட்டிருந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இக்காரணத்தினால் | சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சர்வதேச போட்டிச் செலவுகளில் நீக்கப்படாது காசோலையை இரத்துச் செய்தலல் அனுசரனை வருமானமாக ஏனைய வருமானங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இக்கொடுக்கல் வாங்கல் சரியாகக்கணக்கிடப்படாத காரணத்தினாலல் சர்வதேசப் போட்டிச் செலவுகள் ரூபா 2,000,000 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய வருமானங்களும் ரூபா 2,000,000 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கான ஒட்டு மொத்த விளைவுகளில் தாக்கமொன்று ஏற்படாத போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 570 | வைப்புச் செய்யப்பட்ட திகதியிருந்து 2 வருடத்திற்குள் உரிமைகள் கோரப்படாத ரூபா 10,000 வீதம் ரூபா 120,000 பெறுமதியான 12 முதிர்வடைந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019.11.19 இல் இரு வருடங்கள் முடிவடைந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 79,788,742 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 6,495,404 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளிலல் ரூபா 73,293,338 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு நிதியத்தின் வருமானம் ரூபா 28,363,693 ஆல் குறைவடைந்தமை மற்றும் செலவுகள் ரூபா 44,929,644 ஆல் அதிகரித்தமையே பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் விளையாட்டை ஊக்குவிப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் மற்றும் | குறிப்பிடப்பட்டுள்ள அவதானம் தொடர்பாக கவனம் எடுக்கப்படு | விளையாட்டு நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி செய்வதற்கும் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதால் பிரதேச ரீதியாக விளயைாட்டுக்களை மேம்படுத்துவது அவசியம் என்பதுடன் அதன் பிரகாரம் பிரதேச ரீதியாக விளையாட்டுக்களின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் அமைப்புக்கள் கட்சிகள் மற்றும் தனிப்பட்டோருக்கு அனுசரணை வழங்குவது சங்கத்தின் நோக்கமென்பதுடன் அதற்காக இற்றை வரையில் முறையான முறைமையொன்று பின்பற்றப்படாமை மற்றும் அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதியம் விளையாட்டுக்களின் மேம்பாட்டிற்காக போதுமானளவு பங்களிப்பை அளிக்கின்றதா என்பது குறித்து உறுதியாகப் பரீட்சிக்கப்பட வில்லையென்பது அவதானிக்கப்பட்டது. | மென்பதுடன் விளையாட்டு நிதியத்தினால் அனுசரணையொன்று வழங்கப்படும் போது பின்பற்றப்படுகின்ற நடவடிக்கைச் செயற்பாடுகள் தொடர்பாக முறைமையொன்று தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இந்த அனுசரணை வழங்கப்பட்டதன் அடிப்படையில் விளையாட்டுக்களின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படுகின்ற பங்களிப்பு தொடர்பாக பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | செயலாற்றலை அடைந்து கொள்வது தொடர்பான பரிசோதனை களுக்காக முறைமையான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை கம்புறுபிட்டிய குத்துச்சண்டை மைதானத்திற்கான கட்டிடமொன்று தயாரித்தல் மற்றும் கம்புறுபிட்டிய கரப்பந்தாட்ட மைதானத்தின் அபிவிருத்திக்கான முழு நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 9,157,993 ஆன மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணம் வழங்கப்படுவதற்கு முன்னர் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான சாத்தியக்கூறு அறிக்கை, களப் பரிசோதனை அறிக்கை, விளையாட்டு கழகத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டிருக்காததுடன் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் மிகுதியான ரூபா 2,538,933 ஆனது விளையாட்டு நிதியத்திற்கு மீண்டும் பெறப்படுவதற்கு 2021 திசெம்பர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பாக அமைச்சின் பொறியியலாளர் களப் பரிசோதனையொன்றை மேற்கொண்டிருந்ததுடன் அவரது அறிக்கை கிடைத்த பின்னர் இதற்கான விரிவான பதிலொன்று சமர்ப்பிக்கப்படும். | விளைளாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காக நிதியம் பயன்படுத்தப்படும் போது சாத்தியக்கூறு அறிக்கை, களப் பரிசோதனை அறிக்கைகள் போன்ற தகவல் பெறப்பட்டு நிறுவகத்தின் செயற்திறன் தொடர்பாக திருப்தியடைய வேண்டியதுடன், அபிவிருத்தி பணிகளுக்காக செலவிடப்படுகின்ற சரியான நிதியத்தின் அளவு தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகள் செய்யப்படல் மற்றும் மிகுதித் தொகை நிதியத்திற்கு காலதாமதமின்றி பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |